# பிரகாசமுள்ள கண்கள்
# (1:17-19)

*ஒரு சில வாரங்களுக்கு முன்பாக நான், வௌவால்கள் பற்றிய நிகழ்ச்சியொன்றைத் தொலைக் காட்சியில் பார்த்தேன். மக்கள் காணும் முறையிலிருந்து மாறுபட்ட முறையில் வௌவால்கள் "காண்கின்றன." நாம் ஒரு அறையில் உட்கார்ந்து இருக்கும் பொழுது, சுவர்களையும், நாற்காலி களையும், மேசைகளையும், புத்தகங்களையும், மக்களையும் காண்கின் றோம். அதே அறையில் ஒரு வௌவால் பறந்தது என்றால், அது ஒளிக் கதிர்களைக் காண்பதினால் அல்ல, ஆனால் சப்தங்களின் எதிரொலியை கேட்பதினாலேயே ''பார்க்கும்.'' வௌவால்கள் அடிப்படையில் பார்க்கும் தன்மையற்றவைகளாய் உள்ளன. வௌவால்களும் மக்களும் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி உணர்ந்தறியும் வழியில் மாறுபடுகின்றன(ர்).*

*வாழ்வை உணர்ந்தறியும் விஷயத்தில் கிறிஸ்தவர் அல்லாதவர்களில் இருந்து கிறிஸ்தவர்கள் அடிப்படையில் மாறுபடுகின்றனர். இதைப் பவுல் 1:17-19ல் ஒப்புக் கொண்டார். அவர், புறதெய்வ வணக்கம் நிறைந்திருந்த நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு நிருபத்தை எழுதினார். இந்தக் கிறிஸ்தவர்கள் எக்ளேசியாவின் அங்கமாய் இருந்தனர். எக்ளேசியா என்பது, "சபை" என்பதற்கான புதிய ஏற்பாட்டு வார்த்தையாக உள்ளது. இது, "கூட்டம், ஒன்றுகூடுதல், சபை" என்று அர்த்தப்படுகின்றது. சபையை ஒரு உலகப்பிரகாரமான கட்டிடம் என்பதாகப் பவுல் ஒருக்காலும் நினைத்ததில்லை. சபை அல்லது எக்ளேசியா என்பது மக்களால் - இயேசு கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டு மாற்றப்பட்ட மக்களால் - ஆனதாகவே உள்ளது. எக்ளேசியாவின் உறுப்பினர்கள் வாழ்வைக் காணும் விதமானது அவிசுவாசிகள் வாழ்வைக் காணும் விதத்திலிருந்து முற்றிலும் மாறுபாடு கின்றது. பவுல் அளித்த ஜெபத்தில் இது விவரிக்கப்படுகின்றது:*

> *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தை யும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டா யிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் நமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் … விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்*

*குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (1:17-19).*

*வாழ்வைக் காணும் விஷயத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாதவர் களிலிருந்து வித்தியாசப்படுகிறார்கள். நிஜமாகவே, உலகம் கற்பனை கூட பண்ணக் கூடாத வழியில் பிரகாசமாக்கப்பட்ட நம்முடைய கண்கள் வாழ்வை உணர்ந்தறிகின்றன. உலகம் பார்க்கக் கூடாததை எக்ளேசியா என்னதான் பார்க்கக்கூடும்?*

## நமது பிரகாசமாக்கப்பட்ட கண்கள் நம்மை, தேவனைக் காணவும் அறியவும் கூடியவர்களாக்குகின்றன

*கிறிஸ்தவர் தேவனை அறிகின்ற வகையில் கிறிஸ்தவரல்லாதவர் தேவனை அறிய முடியுமா? கிறிஸ்துவுக்குரியவர்களாய் இல்லாதவர்களின் குறைவான அறிவைப் பற்றி வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. அவர்கள் "புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராய்" (4:18) இருக்கின்றனர். இப்பொழுது நீங்கள் உட்கார்ந்து, காண்கின்ற அறையை ஒரு வௌவால் எவ்விதம் காண முடியுமோ, அதே வகையில்தான், கிறிஸ்தவர்கள் கண்டு அறிந்துள்ள தேவனை கிறிஸ்தவர் அல்லாதவர்கள் கண்டு அறிய முடியுமே தவிர அதை விட அதிகமாக அவர்கள் அவரை(தேவனை)க் கண்டு அறிவதில்லை. எக்ளேசியாவுக்குப் புறம்பே வாழ்வு என்பது ஒரு விதமாக உணர்ந்தறியப் படுகிறது. எக்ளேசியாவின் உள்ளே வாழ்வு என்பது இன்னொரு விதமாக உணர்ந்தறியப்படுகின்றது.*

*கிறிஸ்தவர்களுக்கு மிகவும் விசேஷித்த ஒன்றை அருளும்படிக்குத் தேவனிடத்தில் பவுல் ஜெபித்தார்: "ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி" (1:17ஆ). தேவன் கிறிஸ்துவுக்குள் செய்துள்ளவை பற்றி "கிறிஸ்தவர் கள் - மட்டும்" கொண்டிருக்கும் வகையிலான உட்கண்ணோட்டத்தையும் கிறிஸ்துவுக்குரியவர்கள் மீது கிறிஸ்து கொண்டுள்ள செயல்தாக்கத்தையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.*

*Field of Dreams என்ற ஆங்கிலத் திரைப்படம் ரே கின்செல்லா என்ற பெயர் கொண்ட கதாபாத்திரத்தை மையங் கொண்டதாயிருந்தது, அவர் ஐயோவாவின் மக்காச்சோள வயலின் மத்தியில் பேஸ்பால் விளையாடும் களம் ஒன்றை ஏற்படுத்தினார். அவர் அதை ஏற்படுத்தி முடித்தபோது கடந்த காலத்தில் வாழ்ந்திருந்த பேஸ்பால் விளையாட்டு வீரர்கள் அவரது விளையாட்டுக் களத்திற்கு வந்து மீண்டும் ஒருமுறை விளையாடினார்கள். நீண்ட காலமாக, ரேயும், அவரது மனைவியும் மற்றும் அவரது மகளும் மட்டுமே விளையாட்டு வீரர்களைக் காண முடிந்தது. விளையாட்டு வீரர்கள் பிறருக்கு காணப்படாதவர்களாய் - அவர்கள் அதை நம்பாதபடி யினால் காணப்படாதவர்களாய் - இருந்தனர். கதையில், ரேயின் மைத்துனர்*

தாம் காண முடியாத மக்களை ரே கண்டதால், ரே தனது சித்தங் கலங்கியிருந்தார் என்பதாக நினைத்தார்.

இது போன்ற விஷயம்தான் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படுகின்றது. தேவன் கிறிஸ்தவர்களைக் காணும்படி செய்தவைகள் எவைகளோ, அவைகளைக் காண முடியாத மக்களால் நாம் சூழப்பட்டுள்ளோம். கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ளவர்கள் அன்றாட வாழ்வை - வீடுகளை, கார்களை, பள்ளிகளை மற்றும் விடுமுறைக்குச் சென்றடையும் இடங்களை - காண்கின்றனர். அவர்கள் காணக்கூடிய உண்மை நிலையின் மொத்தமாக உள்ள இந்த விஷயங்களை உணர்ந்து அறிகின்றார்கள். அவர்கள் காணக்கூடிய, இயல்பு நிலைகொண்ட, பொருளாதாய உலகை மட்டுமே காண்கின்றனர்.

எபேசியர் 1ம் அதிகாரம் முழுவதிலும் பவுல், முற்றிலும் மாறுபட்ட உண்மை நிலை அல்லது பரிமாணம் பற்றிப் பேசினார். இது நமது உடல்ரீதியான கண்களுக்கு காணப்படாததாக நிலைத்துள்ளது, ஆனால் இது நமது இந்த இயல்பான உலகத்தைப் போலவே உண்மையுள்ளதாக உள்ளது. எக்ளேசியாவின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் பவுல் எழுதிய விஷயங்களை உணர்ந்தறிய வர முடியும்.

ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் அருளப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவர், இயேசுவுக்குள் தேவன் நிறைவேற்றியுள்ளது என்ன என்பதையும், அதன் விளைவாக நமது வாழ்வானது என்றென்றைக்கும் எவ்வாறு மாற்றப் பட்டுள்ளது என்பதையும் உண்மை நிலை என்ற வகையில் காண்பதற்கு நமக்கு உதவுகின்றார். நாம், கிருபை, மன்னிப்பு, மீட்பு, ஆவிக்குரிய சுதந்தரம் மற்றும் நமது ஆவிகளில் தேவனுடைய ஆவியானவர் உள்ளாக வாசம் பண்ணுதல் ஆகியவற்றின் உண்மை நிலையைக் கண்டு பற்றிக் கொள்ள வருகின்றோம். எக்ளேசியாவுக்குப் புறம்பே, இவற்றில் எதுவும் உண்மை நிலையில் உள்ளதாகக் காணப்படுவதில்லை.

மற்றவர்கள் உணர்ந்தறிய இயலாதவற்றை உணரும் திறனை தேவன் எக்ளேசியாவுக்கு ஏன் கொடுக்கின்றார்? நாம் தேவனைத் தனிப்பட்ட வகையில் அறிய வரும்படிக்கு அவர் விரும்புகின்றார். பவுல், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தர வேண்டுமென்று" (1:17) கேட்டுக் கொண்டார்.

நீங்கள் தேவனை அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பு கின்றார். தேவனை அறிந்து கொள்வதற்குப் பவுல் பயன்படுத்திய வார்த்தை யானது, தேவனுடனான மேலோட்டமான ஒரு பழக்கத்திற்கு நேரெதிரான வகையில் முழுமையான, ஆழமான, தனிப்பட்ட அறிவு சார்புடையதாக உள்ளது. இவ்வகையான அறிவானது பங்கேற்றல் மற்றும் அனுபவம் ஆகிய வற்றின் வழியாகவே வருகின்றது. இது யாரேனும் ஒருவரைப் பற்றிய சில உண்மைகள் அல்லது விவரங்களை மட்டும் அறிதல் என்பதற்கு மாறாக, யாரேனும் ஒருவரைத் தனிப்பட்ட அடிப்படையில் அறிதலை வலியுறுத்துகின்றது.

*தேவனைப் பற்றிய இந்தத் தனிப்பட்ட அறிவானது கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டுமே சாத்தியமானதாகின்றது. எனவேதான் ஒரு சபையானது உண்மையானதொரு எக்ளேசியாவாக இருத்தல் என்பது அவ்வளவு கடினமானதாக உள்ளது. ஒரு உள்ளூர் சபையானது தான் உள்ள சமுதாயத்தில் இன்னொரு நிறுவனமாக மட்டும் இருப்பதைத் தேவன் விரும்புவதில்லை. எக்ளேசியா என்பது கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் இடம் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. இது அட்டவணையிடப்பட்ட வேதாகம வகுப்புகள் மற்றும் ஆராதனைக்குக் கூடிவருதல்கள் என்பதை நடத்தும் இடம் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக எண்ணப்படுகின்றது. உண்மையான எக்ளேசியா என்பது கிறிஸ்தவர்கள் தேவனை அறிய வாய்ப்புக் கொண்டுள்ள சபையாக உள்ளது.*

*உள்ளூர் சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் பிற உறுப்பினர்கள் கர்த்தரை அறிய உதவி செய்வதில் அத்தியாவசியமானவர்களாய் உள்ளனர். கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய ஆவியானவர் தங்களுக்குள் வாழ்கின்ற மக்கள் என்ற வகையில் ஒருவருக்கொருவர் செயலாற்றுகின்ற பொழுது, தேவனைப் பற்றிய அறிவு நேரிடுகின்றது. இது, நாம் நம் கர்த்தரைப் பற்றிய அறிவை ஒருவர் மற்றவருடன் சம்பாஷிக்கும் போது நடைபெறுகின்றது. இது, நாம் அன்றாட (வாழ்க்கை) அமைவுகளில் "ஒருவர் பிறருக்கான"[1] புதிய ஏற்பாட்டின் கட்டளைகளை தனிப்பட்ட வகையில் நடைமுறைப்படுத்தும் பொழுதும், கர்த்தருடைய பிரசன்னத்தை அனுபவத்தில் உணரும் பொழுதும் நடைபெறுகின்றது.*

*இந்தப் பாடத்தில் நீங்கள் ஏதொன்றையும் நினைவில் வைக்காதிருப்பினும், தயவு செய்து இதைக் கற்றுக்கொள்ளுங்கள்: எக்ளேசியா (கிறிஸ்தவர்களின் சீர்த்தன்மையுடன் உட் செயல்புரியும் அமைப்பு) தேவனை அறிதல் என்பதை உண்மையிலேயே பெறுவதற்கு அழகு மிக்க அமைவு ஒன்றை அளிக்கின்றது.*

*ஒவ்வொரு சபையிலும் உள்ள சபை நடத்துனர்கள், பிற கிறிஸ்தவர்களுடன் கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட அமைவுகளில் உட்செயல்பாடு, ஐக்கியம் மற்றும் ஊழியம் ஆகியவற்றை மேற்கொள்வதை உற்சாக மூட்டுவதற்கு அதிக கவனம் கொடுக்கத் தங்களையே ஒப்புக் கொடுக்க வேண்டும். தொடக்க நாட்களில் எக்ளேசியா இதைச் செய்தது, இது இவ்வாறு செயலாற்ற வேண்டுமென்றுதான் தேவன் அர்த்தப்படுத்தினார்.*

## நமது பிரகாசமாக்கப்பட்ட கண்கள் நம்மை காணப்படாத உண்மை நிலைகளை உணர்ந்து அறியக்கூடியவர்களாக்குகின்றன

*காணப்படாத மூன்று உண்மை நிலைகளைப் பவுல் குறிப்பிட்டார்: நம்பிக்கை, சுதந்தரம் மற்றும் வல்லமை:*

*தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை*

*இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் ... நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (1:18, 19ஆ).*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது நம்பிக்கையானது உடல்ரீதியான கண்களினால் காணப்பட முடியாது. நமது நம்பிக்கை மனக்கண்களால் மட்டுமே காணப்படக் கூடியதாகின்றது. கிறிஸ்தவர்கள் மட்டுமே இதை உணர்ந்து அறிகின்றார்கள். நாம் இயேசுவினிடத்தில் வருவதற்கு முன்னால் நாம் இந்த நம்பிக்கையைக் கொண்டிருந்ததில்லை. ''அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர் களென்று நினைத்துக் கொள்ளுங்கள்'' (2:12).*

*கிறிஸ்தவர்கள் மட்டுமே, "பரலோகத்திலே உங்களுக்காக வைத்திருக் கிற நம்பிக்கை" (கொலோ. 1:4) என்பதைக் கொண்டுள்ளனர். கிறிஸ்தவர் கள் மட்டுமே, "இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, ... ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி'' (1 பேது. 1:4) உள்ளனர். கிறிஸ்தவர்கள் என்ற வகையிலான நமது நம்பிக்கையானது வெறும் நல்லுணர்வுள்ள உணர்வெழுச்சியாக மட்டும் இருப்பதில்லை. நமது நம்பிக்கையானது, வாழ்வைப் பற்றிய நேர்மறையான எண்ணப்போக்கைக் காட்டிலும் அதிகமானதாகக் கணக்கிடப்படுகின்றது. இது தமது ஜீவன் நமது ஜீவனாயிருக்கும் என்றும் தமது நித்திய இல்லம் நமது இல்லமாய் இருக்கும் என்றும் வாக்களிக்கின்ற ஜீவனுள்ள கர்த்தரின் உண்மை நிலையின் மீது மையங் கொண்டுள்ளது. பிரகாசமாக்கப்பட்ட கண்கள் மட்டுமே இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையின்மீது கண்ணோக்க இயலும்.*

*மேலும், கிறிஸ்தவர்களின் பிரகாசமாக்கப்பட்ட கண்கள் மட்டுமே எக்ளேசியாவைத் தேவனுக்குச் சொந்தமான சுதந்தரம் என்பதாகக் காண முடியும். கிறிஸ்தவர்கள், "பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு (தேவனுக்கு) உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்ன தென்று'' காணக் கூடியவர்களாயிருக்கும்படிக்குப் பவுல் ஜெபித்தார். தேவன் கொண்டுள்ள எல்லாவற்றைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்த பூமியின் அழகு முழுவதையும் சிந்தித்துப் பாருங்கள். இதன் செல்வங்கள் யாவற்றையும் கணக்கிட்டுப் பாருங்கள். சூரியன், சந்திரன் மற்றும் விண்மீன் கள் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க சிறப்புயர்வை ஆழ்ந்து யோசியுங்கள். மிகப் பரந்த அண்டத்தில் உள்ள வானவெளி மண்டலங்களை ஆச்சரியத் துடன் கண்ணோக்க ஆகாயத்தை உற்றுப் பாருங்கள். படைப்பு யாவற்றை யும் தேவனுக்கு முன்பாக வைத்து, தேவனுடைய மாபெரும் பொக்கிஷம் எது என்று சுட்டிக்காண்பிக்கும்படி அவரிடத்திலேயே கேட்கப்பட்டால், அது எதுவாயிருக்கும்? தேவனுடைய மதிப்பு மிக்க உடமை எதுவாக உள்ளது?*

படைக்கப்பட்ட இந்த அண்டத்தின் பொக்கிஷங்கள் யாவற்றிலு மிருந்து தேவன் தமது மிகவும் விலைமதிப்புள்ள உடமையாக எக்ளேசியா வைத் தேர்ந்து கொள்வார் என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார்! சபையைத் தேவன் காண்கின்ற விதமாக உலகம் அதைக் காண்பதில்லை. கிறிஸ்தவர்கள் பலரும் கூட தேவன் சபையுடன் இணைக்கின்ற உயர்ந்த மதிப்புகளைப் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

பிரகாசமாக்கப்பட்ட கண்கள் சபையை மாறுபட்ட வகையில் கண்ணோக்குகின்றன. இது தேவனுடைய சுதந்தரமாக, தேவனுடைய பொக்கிஷமாக, தேவனுடைய விலையுயர்ந்த உடமையாக உள்ளது. நாம் சபைக்கு உரியவர்களாய் இருக்கும் பொழுது இதற்குரியவர்களாய் இருக்கின்றோம். நாம் எக்ளேசியாவின் அங்கமாக - தேவன் தம்முடையவர் கள் என்று அழைக்கக் கூடிய மக்களைப் பெறுவதற்காகத் தேவன் பல காலங்களாகக் கொண்டிருந்த அவரது திட்டத்தை விரித்துரைப்பவர்களாக இருக்கின்றோம்.

நமது வசனப் பகுதியில், காணப்பட முடியாத இன்னொரு உண்மை நிலை - வல்லமை - குறிப்பிடப்பட்டுள்ளது. பவுல் "விசுவாசிக்கிறவர் களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்" பற்றி எழுதினார். சுவிசேஷத்தின் மூலமாக எக்ளேசியாவுக்குக் கிடைக்கப் பெறுகிற வல்லமையை நோக்கிக் கவனத்தை இழுப்பதற்கு அவர் பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தினார். "வல்லமை" என்பதற்கு நான்கு மாறுபட்ட வார்த்தைகள் வசனம் 19ல் உள்ளன.[2] அவர், கிறிஸ்துவுக்குள் நாம் சாத்தியப் பட்ட அளவுக்கு உயர்ந்த வல்லமையை எதிர்கொள்ளுகின்றோம் என்ற சத்தியத்தை வலியுறுத்து வதற்கு வல்லமைக்கான ஒரு வார்த்தையை வல்லமைக்கான இன்னொரு வார்த்தையின்மீது வைத்து அடுக்குகின்றார். இது வல்லமையின் மாபெரும் தன்மையில் கடந்து செல்ல இயலாத அளவு அதன் ஒன்றுகுவிதலைக் கணக்கிடுகின்றது.

கிறிஸ்தவர்கள் மட்டுமே இந்த வல்லமையைக் காண முடியும். உண்மையில், கிறிஸ்தவரல்லாதவர்கள் தேவனுடைய செய்கைகளில் சில வேளைகளில் பலவீனத்தைத் தவிர வேறொன்றையும் காண்பதில்லை. சிலுவையின் அடியில் இருந்தவர்களில் பெரும்பாலோர், தேவனுடைய இரட்சிக்கும் வல்லமை செயல்பட்டதைக் காணாதிருந்தனர் என்பதை நினைவில் வையுங்கள். அவர்கள், தாங்கள், வீழ்ச்சியையும் தோல்வியையும் - தாம் மேசியாவாய் இருந்ததாக நினைத்த, தவறாக வழிநடத்தப்பட்ட ஒரு மனிதனின் மரணத்தை - கண்ணோக்கியதாக நினைத்தார்கள்.

இதற்கு நேர்மாறாக, தேவனுக்குத் திறந்திருந்த கண்கள் சிலுவையை அதன் இரட்சிக்கும் வல்லமை யாவற்றிலும் கண்ணோக்குகிறது. இது தேவனுடைய விவரிக்க இயலாத, இன்னொரு உலகத்திற்குரிய வல்லமைக் குச் சாட்சியம் அளிக்கின்றது. இது விசுவாசிக்கிற யாவருக்கும் நித்திய ஜீவன் அளிக்கும்படிக்கு கல்லறையிலிருந்து வெடித்தெழுந்த வல்லமையாக உள்ளது.

# *முடிவுரை*

*எக்ளேசியாவுக்குள்ளாக கிறிஸ்தவர்கள் காண வருவதை, விசுவாசியாத உலகமானது காண முடியாது. தேவன் நமக்கு பிரகாசமாக்கப்பட்ட கண்களைக் கொடுக்கின்றார். நாம் இந்த உலகத்தை வித்தியாசமான வகையில் உணர்ந்தறிய முடியும், அவ்வாறே செய்ய வேண்டும். இருப்பினும், இதைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்: உங்கள் சபையும் அதற்குள் இருக்கும் மக்களும் உங்கள் வாழ்வில் ஒரு வசதியளிக்கும் இருப்பறை போல் இருந்தால் நீங்கள் பிரகாசமாக்கப்பட்ட கண்களையோ, நம்பிக்கையையோ அல்லது வல்லமையையோ கொண்டிருக்க மாட்டீர்கள். நீங்கள் வாரம் ஒருமுறை ஒரு வாகனத்தை ஓட்டிக் கொண்டு சென்று, ஒரு கட்டிடத்தினுள் பிரவேசித்து, சற்று நேரம் அமர்ந்து பிற கிறிஸ்தவர்களுடன் தனிப்பட்ட தொடர்பு எதுவுமின்றி - விசேஷமாக ஆவிக்குரிய தொடர்புகள் எதுவுமின்றி—மீண்டும் அங்கிருந்து வாகனத்தை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்து விட்டால் நீங்கள் வல்லமையைக் கருத்தில் உணர மாட்டீர்கள். நீங்கள் தேவனை அவரது மக்களுக்கு புறம்பே அறியவோ அல்லது காணவோ முடியாது.*

*உள்ளூர் சபை இதில் பணியாற்ற உதவி செய்யுங்கள். உங்களை நடத்துகின்றவர்களை ஆதரியுங்கள், மற்றும் அவர்கள் புதிய ஏற்பாட்டின் "ஒருவர் மற்றவருக்கான" கட்டளைகளை அதிகம் முழுமையாகவும் சீர்த்தன்மையுடனும் நடைமுறைப்படுத்தும் வழியைச் சபைக்கு சுட்டிக்காட்டுவதில் தீவிரமாயிருக்க அவர்களை உற்சாகப்படுத்துங்கள். அதன் பிறகு, மற்றும் அப்பொழுது மட்டுமே, சபை பிரகாசமாக்கப்பட்ட கண்களின் ஆசீர்வாதத்தை அனுபவிக்கும்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்தக் கட்டளைகள், "ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்" (யோவா. 13:34); "சகோதர சிநேகத்தில் ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்" (ரோமர் 12:10); "கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்" (ரோமர் 15:7); "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து (கொள்ளுங்கள்)" (கலா. 6:2); "ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெச. 5:11); "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் ... ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்" (1 பேது. 4:10) மற்றும் இது போன்ற பலவற்றை உள்ளடக்குகின்றன. [2]இவற்றில் முதலாவது, வல்லமை என்பதை இயல்பான திறன் என்ற வகையில் குறிக்கின்ற dunamis* ("power") *என்பதாக உள்ளது. இரண்டாவது, எல்லா எதிர்ப்பு களையும் வெற்றி கொள்ளுகின்ற வல்லமையாகிய energeia ("செயலாற்றுதல்") என்பதாக உள்ளது. மூன்றாவது, ஒரு இலக்கை நிறைவேற்றுவதற்கு அளவில் சிறந்த வகையில் திறனளிக்கும் வல்லமையாகிய kratos ("பலம்") என்பதாக உள்ளது, நான்காவது, இது பலம் அல்லது திறன் என்ற கொடையாக அளிக்கப்பட்டுள்ள ischus* ("might") *என்பதாக உள்ளது.*